


புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2052 நவம்பர் 11, 2021 புரட்சி 20 முழக்கம் 37 விலை: ரூ.3.00


## கழகப் பொறுப்பாளர்கள் சுற்றுப் பயணம்

# தோழர்களுடன் சந்திப்பு - உரையாடல்

*கழகப் பணிகளை தீவிரப்படுத்தவும் கழக ஏடான 'புரட்சிப் பெரியார் முழக்கம்', 'நிமிர்வோம்' ஏட்டுக்கு உறுப்பினர்கள் சேர்ப்பது குறித்து ஆராயவும், கழகப் பொறுப்பாளர்கள், கழகத் தோழர்களை சந்திக்க சுற்றுப் பயணம் வருகிறார்கள்.*

**திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்களின் கவனத்திற்கு,**

கடந்த இரண்டு ஆண்டுகளாக (2020, 2021) கொரோனா பெரும் தொற்றால் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்ததோடு, இயக்க செயல்பாடுகளும் இணைய வழியில் மட்டும் நடைபெற்று வந்தன. ஒரு சில நிகழ்வுகள் தவிர்த்து இயக்க பணிகள் சுணக்கமாகி விட்டது.

இதனைப் போக்கும் வகையில் மாவட்டம் தோறும் கழகப் பொருளாளர் மற்றும் அமைப்புச் செயலாளர், பரப்புரைச் செயலாளர், தலைமைக் குழு உறுப்பினர்கள் கலந்து கொள்ளும் கலந்துரையாடல் கூட்டங்கள் நடைபெற உள்ளன. கூட்டத்தில் இயக்க செயல்பாடு மற்றும் கழக ஏடுகள் (புரட்சிப் பெரியார் முழக்கம், நிமிர்வோம்) குறித்தும் தற்போது மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் விவாதிக்க உள்ளனர். பொறுப்பாளர்களின் சுற்றுப்பயண நிகழ்வின் முதல் பட்டியல் வெளியிடப்படுகிறது. வரும் வாரங்களில் மீதம் உள்ள மாவட்டத்திற்கான சுற்றுப்பயண விவர அறிக்கை வெளியாகும்

தலைமைக் கழகப் பொறுப்பாளர்கள் கலந்து கொள்ளும் கலந்துரையாடல் கூட்ட பயண விபரம் :

**18.11.2021 வியாழக்கிழமை :**

காலை : 11.00 மணி - மதுரை மாவட்டம். மதிய உணவு. மாலை 5:00 மணி - சிவகங்கை மாவட்டம் காரைக்குடி - இரவு தங்கல்.

**19.11.2021 வெள்ளிக்கிழமை :**

காலை 10:30 மணிக்கு - தஞ்சை மாவட்டம் பேராவூரணி. மதிய உணவு - மாலை : 4:00 மணிக்கு கும்பகோணம். இரவு 7:00 மணிக்கு - மயிலாடுதுறை. இரவுதங்கல்.

**20.10.2021 சனிக்கிழமை :**

காலை 11 மணிக்கு - கடலூர் மாவட்டம் - மதியம் : பெரம்பலூர் மாவட்டம் - மதிய உணவு - இரவு 7:00 மணிக்கு திருச்சி மாவட்டம்.

இரண்டாம் கட்ட சுற்றுப்பயணம் :

**23.11.2021 செவ்வாய்கிழமை :**

காலை. 11:00 மணி - திண்டுக்கல் மாவட்டம், பழனி. மதிய உணவு. - மாலை. 4:00 மணி திருப்பூர்மாவட்டம் மடத்துக்குளம். - மாலை - 7:00 பொள்ளாச்சி.

**24.11.2021 புதன்கிழமை :**

காலை 10:30 மணி கோவை மாவட்டம். - மாலை : 5:00 மணிக்கு திருப்பூர் மாவட்டம்.

**25.11.2021 வியாழக்கிழமை :**

காலை 10:00 மணி நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு - மதிய உணவு - மாலை 4:00 மணி - ஈரோடு (வடக்கு) மாவட்டம் கோபி செட்டிபாளையம்.

மேற்கண்ட மாவட்ட பொறுப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை செய்து, அனைத்து தோழர்களுக்கும் உரிய தகவல் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தலைமை கழகம்,
திராவிடர் விடுதலைக் கழகம்
06.11.2021.

*பயணக் குழுவில் அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, பொருளாளர் திருப்பூர் துரைசாமி, பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர் செல்வம் பங்கேற்கின்றனர்.*

## தீபாவளி 'பட்டாசு'ப் புகையால் மூச்சுத் திணறிய தலைநகரம்

தீபாவளி என்ற பண்டிகை நடந்து முடிந்துவிட்டது. நரகாசூரன் என்ற அசுரனை, மகாவிஷ்ணு பன்றி அவதாரம் எடுத்து சூழ்ச்சியாகக் கொன்ற நாள். அசுரர்கள் கொன்று ஒழிக்கப்பட வேண்டியவர்கள் என்பதற்காக, புராணக் கற்பனைக் கதையிலிருந்து உருவாக்கப்பட்டது தான் தீபாவளிக் கதை. அந்த தீபாவளி பண்டிகையாக மக்கள் மீது திணிக்கப் பட்டது. அந்த விழா கொண்டாட்டத்தைப் பட்டாசு வெடித்துக் கொண்டாடுங்கள் என்று ஒரு வழக்கமும் சமூகத்தில் திணிக்கப்பட்டது.

அசுரர்கள் என்பவர்கள் இந்த நாட்டின் உழைக்கின்ற மக்கள். தேவர்கள் என்பவர்கள் வேதங்களை ஓதி, மந்திரங்களை ஓதி, யாகங்களை நடத்தி உழைக்கின்ற மக்களை சுரண்டிக்கொண்டிருந்தவர்கள். அவர்களுக்கு இந்த உழைக்கின்ற மக்கள் மிகப் பெரிய சவாலாக இருந்தார்கள். வேதங்களை கேள்வி கேட்டார்கள். அதன் காரணமாக இந்த அசுரர்கள் என்கிற உழைக்கும் மக்களை கொல்ல வேண்டும், அழிக்க வேண்டும் என்பதற்காக பல அவதாரங்களை எடுத்து வந்து, கடவுள்கள் அழித்தார்கள் என்று ஆரிய, பார்ப்பனியப் புராணங்கள் பல கட்டுக்கதைகளை உருவாக்கியது. அந்த அடிப்படையில் கொண்டாடப் பட்டது தான் நேற்று நடந்த தீபாவளி. அதனுடைய விளைவு என்ன?

இன்றைக்கு சென்னை நகரத்தில் மட்டும் 48 டன் குப்பைகள் அகற்றப் பட்டு இருக்கின்றன. குப்பையை எடுக்கின்ற அந்த விளிம்பு நிலையில் இருக்கின்ற தொழிலாளிகள், எவ்வளவு அல்லலுக்கு, எவ்வளவு மாசுக்கு உட்பட்டிருப்பார்கள் என்பதை மனித நேயத்தோடு சிந்தித்துப் பார்க்க வேண்டும். AQI (Air Quality index) என்று மாசு பற்றிய ஒரு கண்ணோட்டம், 50 AQ இருந்தால் நல்ல காற்று, 100 வரை இருந்தால் ஏற்றுக் கொள்ள முடியும். என்று கூறுகிறது Air Quality index. ஆனால், நேற்று சென்னையில் 500 யும் தாண்டி இருக்கிறது AQ. இரண்டு மணி நேரத்தில் 45 சிகரெட் புகையினை ஒருவர் சுவாசித்தால் என்ன பாதிப்பு ஏற்படுமோ அத்தகைய பாதிப்புகளை சென்னை நகர வாசிகளுக்கு தீபாவளி கொண்டாட்டம் உருவாக்கியிருக் கிறது.

நுரையீரல் நோயால் பாதிக்கப் பட்டவர்கள் அடுத்த சில வாரங்களில் மருத்துவமனையை நோக்கி வரப் போகிறார்கள் என்ற செய்திகளும் வந்து கொண்டு இருக்கின்றன. இப்படி மனிதன் சுவாசிக்கும் காற்றைக் கெடுக்கின்ற ஒரு விழாவாக ஒரு மதத்தினுடைய விழா இருக்க வேண்டுமா? இது அறிவியலுக்கு உகந்தது தானா? இத்தகைய விழாக்களை இன்னும் எத்தனை ஆண்டுகாலம் கட்டி அழுது கொண்டிருக்கப் போகிறோம்? என்ற சிந்தனைகளை நோக்கி சமூகம் நகர்ந்தாக வேண்டும்.

## திராவிட கட்சியினர் தீபாவளிக்கு வாழ்த்து சொல்லாதது ஏன்? வைகோ விளக்கம்

இந்துக்களின் பண்டிகையான தீபாவளிக்கு திராவிட இயக்கத்தைச் சேர்ந்த தலைவர்கள் வாழ்த்து தெரிவிக்கவில்லை. இதற்கு பா.ஜ.க. உள்பட சில அரசியல் கட்சிகள், இந்து அமைப்புகள் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்தன.

இந்தநிலையில், தீபாவளி பண்டிகைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், வைகோ உள்பட திராவிட இயக்கத்தைச் சேர்ந்த வர்கள் யாருமே வாழ்த்து தெரிவிக்கவில்லை. ரம்ஜான், கிறிஸ்துமஸ் உள்ளிட்ட பண்டிகைகளுக்கு வாழ்த்து சொல்கிறீர்களே? என்று கேட்டதற்கு ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ விளக்கம் அளித்துள்ளார்.

"புராணப் பொய், மூட நம்பிக்கைகளை எதிர்த்து திராவிட இயக்கம் போராடி வந்திருக்கிறது. தீபாவளி பண்டிகை என்பது அப்படியொரு புராணப் பொய் யின் அடிப்படையில் கொண் டாடப்படும் பண்டிகையாகும். அதனால் நாங்கள் தீபாவளியை கொண்டாடுவது இல்லை.

தீபாவளி என்பது வட நாட் டினருக்கே உரித்தான, அவர்கள் கொண்டாடும் பண்டிகை. அது தமிழர்களுக்கான பண்டிகை அல்ல. பண்டைய தமிழர்கள் தீபாவளி பண்டிகையை கொண் டாடியதற்கான எந்த வரலாற்று சான்றுகளும் இல்லை.

இஸ்லாத்தை பொறுத்தமட்டில் நபிகள் நாயகம் வாழ்ந்து காட்டினார். கிறிஸ்தவத்தை பொறுத்தமட்டில் ஏசுநாதர் சிலுவையில் அறையப்பட்டார். இவை அனைத்தும் உண்மை சம்பவங்கள். அதனால் கிறிஸ்துமஸ் உள்ளிட்ட கிறிஸ்தவர்களின் பண்டிகைகளுக்கும், இஸ்லாமியர்களின் பண்டிகைகளுக்கும் நாங்கள் வாழ்த்து சொல்கிறோம்.

பொங்கல் பண்டிகை என்பது உழவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக கொண்டாடப்படும் பண்டிகை. மேலும் அது உழவர் மற்றும் தமிழர்களின் திருநாள் ஆகும். ஏனெனில் அது தமிழருக்கே உரித்தான பண்டிகை. பண்டைய தமிழர்கள் காலத்தில் இருந்து நீண்ட நெடுங்காலமாக இன்று வரை கொண்டாடி வரும் பண்டிகையாகும். அதனால் தமிழர் பண்டிகையாக பொங்கல் பண்டிகையை கொண்டாடுகிறோம். அதனால்தான் பொங்கல் பண்டிகைக்கு நாங்கள் வாழ்த்து கூறுகிறோம்" என்றார்.

தலையங்கம்

## நாட்டார் வழிபாடும் வைதீக எதிர்ப்பும்!

நாட்டார் தெய்வ வழிபாடுகள், தமிழர் மரபின் அடையாளங்கள் என்றும் வைதீக பார்ப்பனியத்துக்கு எதிரானவை என்றும் பெருமை கொண்டாடுகிறவர்கள் இருக்கிறார்கள். வைதீகப் பண்பாட்டுக்கு எதிரானவை இந்த நாட்டார் வழிபாடுகள் என்றால், வைதீகத்திடமிருந்து எதிர்ப்புகள் வந்திருக்க வேண்டுமே! அப்படி எந்த எதிர்ப்புகளும் அவர்களிடமிருந்து வரவில்லை என்பதோடு, இந்த வழிபாட்டு முறைகள் மீதான மக்கள் நம்பிக்கை தொடர்ந்து நீடித்தால் தான், தங்களின் வைதீக பார்ப்பனிய மரபுக்கு வலிமை சேர்க்க முடியும் என்று அவர்கள் உறுதியாக நம்புகிறார்கள்.

அதேபோன்று, ‘நாட்டார் மரபு’ வழிபாடுகளைப் பின்பற்றும் பார்ப்பனரல்லாத தமிழர்களும் தங்களது வழிபாடு வைதீகத்துக்கு எதிரானது என்று கருதுவதும் இல்லை. மாறாக, ‘வைதீக’ வழிபாட்டு முறைகளோடு பார்ப்பனியம் கட்டமைத்த சமஸ்கிருதப் பண்பாட்டு சடங்குகளையும் வாழ்க்கையோடு இணைத்துக் கொள்கிறார்கள். நாட்டார் சடங்கு வழிபாடுகள் பெரும்பாலும் கிராமங்களில் ஜாதியக் கட்டமைப்புக்குட்பட்டே நிகழ்த்தப்படுகின்றன. ஒடுக்கப்பட்ட ஜாதியினரை உள்ஞர் வழிபாடுகளில் ஒதுக்கி வைக்கிறார்கள். பல நாட்டார் வழிபாடுகளில் பெண்கள் பங்கேற்பதும் தடை செய்யப்படுகிறது.

‘குல தெய்வ வழிபாடும் வேண்டும்; திருப்பதிக்குப் போய் சிறப்பு தரிசனம் செய்து மொட்டை போடவும் வேண்டும்’ என்ற இரட்டை வாழ்க்கை முறைக்குத் தான் நாட்டார் தெய்வ வழிபாடுகள் இழுத்துச் செல்கின்றன.

இப்போதும் பண்டிகைகளும் சடங்குகளும்தான் மக்களை ‘இந்து’ பார்ப்பனியப் பிடியில் அழுத்தமாகக் கட்டிப் போட்டு வைத்திருக்கின்றன. மட்டுமின்றி, கிராமக் கோயில்களில் நடக்கும் வழிபாட்டு முறைகள் மக்களை மூடநம்பிக்கையில் தீவிரமாக மூழ்கச் செய்து விடுகின்றன.

ஈரோடு மாவட்டம் தாளவாடி அருகே உள்ள கும்பாபுரம் என்ற கிராமத்தில் தீபாவளிக்கு அடுத்த மூன்றாவது நாளில் ஒருவர் மீது ஒருவர் சாணத்தை வீசிக் கொள்ளும் திருவிழா அண்மையில் நடந்துள்ளது. அது கூட பசு மாட்டு சாணமாக இருக்க வேண்டும். எருமை மாட்டு சாணமாக இருக்கக் கூடாதாம். இதிலேயே பார்ப்பனியம் நுழைந்து விட்டது. பார்ப்பனர்கள், பசு மாட்டை மட்டுமே தங்கள் வீடுகளில் வளர்ப்பார்கள். எருமை, காளை மாடுகளை அவர்கள் வளர்ப்பதில்லை. இந்தத் திருவிழா நடக்கும் கோயிலில் ‘மூலவர்’ பெயர் பீரேஸ்வரர். நாட்டார் தெய்வத்துக்கு தமிழ்ப் பெயர் ஒழிக்கப்பட்டு, சமஸ்கிருத மயமாக்கப்பட்டிருக்கிறது. ‘வீதி உலாவுக்கான’ உற்சவர் சிலையை கழுதை மேல் ஏற்றி கோயிலுக்கு அழைத்து வந்து, பூஜைகள் நடத்தி, சாணிகளை ஒருவர் மீது ஒருவர் வீசுவார்களாம். பிறகு ஊர்க் குளத்துக்குப் போய் சாணி உடம்போடு குளிப்பார்களாம். மேலாடை இல்லாமல் ஆண்கள் மட்டுமே பங்கேற்கும் ‘வழிபாடு’ இது. பெண்கள் வேடிக்கைப் பார்க்க வேண்டும்.

குழந்தைகளை மண்ணைத் தோண்டி புதைத்து, மீண்டும் குழந்தையை மீட்டெடுக்கும் ஆபத்தான கோயில் சடங்கு தமிழ்நாட்டில் நடந்தது. அ.இ.அ.தி.மு.க. ஆட்சியின்போது முதல்வராக இருந்த ஜெயலலிதா இதற்கு தடை போட்டார். இப்போதும் தலையிலேயே தேங்காய் உடைக்கிறார்கள். மண்டையில் இரத்தம் சொட்டச் சொட்ட பக்தர்கள் தலையை பூசாரியிடம் காட்டுகிறார்கள். ஆண்டிப்பட்டி அருகே முத்தாளம்பட்டி எனும் கிராமத்தில் ஒருவரையொருவர் துடைப்பத்தால் அடித்துக் கொள்ளும் திருவிழா நடக்கிறது. புதுக்கோட்டை மாவட்டம் வாராப்பூர் கிராமத்தில் தொடையை இரத்தம் வரும் வரை கத்தியால் கீறி அந்த இரத்தத்தை சோற்றில் கலந்து வீசும் திருவிழா இப்போதும் நடந்து கொண்டிருக்கிறது. ஒரு காலத்தில் இந்த கிராமத்தில் ஒரு குழந்தையின் கழுத்தை அறுத்து இரத்தத்தை எடுக்கும் பழக்கம் இருந்திருக்கிறது. இப்போது வேறு வடிவத்தில் மாறி இருக்கிறது.

உடம்பு முழுதும் சாக்குகளைக் கட்டிக் கொண்டு வழிபாடு நடத்தும் திருவிழா, கமுதி அருகே செங்கம்படை எனும் கிராமத்தில் நடக்கிறது. இதைத் தவிர செருப்படி திருவிழா, சேறுவாரி இறைக்கும் திருவிழா என்று நீண்ட பட்டியலைப் போட முடியும். ‘நாட்டார் வழிபாடு’ குலதெய்வ வழிபாடு என்ற பெயரில் காலங்காலமாக நடக்கும் இந்த விழாக்களும் சடங்குகளும் மக்களிடையே ஜாதி கடந்த ஒற்றுமை கிராமங்களில் வளர்க்கவில்லை. மாறாக ஜாதிப் பிரிவுகளை கூர்மைப்படுத்தி மூட நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன.

ஜாதிகள் கட்டமைப்பை மீறுவது அவமானம் என்ற ‘பொது மனவியலை’ ஒவ்வொரு ஜாதிக் குழுக்களுக்குள்ளும் உருவாக்குகின்றது. ஜாதிய சமுகத்தை சிவில் சமுகமாக்கி, சமத்துவ உணர்வை விதைத்து, ஜாதிப் பிடிக்குள்ளிருந்து விடுவிப்பதற்கு இந்த சடங்குகள் பெரும் தடைகளாகவே மாறி நிற்கின்றன. அறிவியல் சிந்தனையை புறக்கணிக்கச் செய்கின்றன. இத்தகைய பண்பாட்டை, ‘வைதீக எதிர்ப்பு’ என்று எப்படி ஏற்க முடியும்?

வைதீகப் பார்ப்பனியப் பண்பாடு – பார்ப்பனரல்லாத மக்களை பார்ப்பனியக் கட்டுக்குள் அடக்கி வைத்துள்ளது என்றால் நாட்டார் பண்பாடு, கிராமங்களில் ஜாதிக் கட்டமைப்பு குலைந்து விடாமல் காப்பாற்றி பார்ப்பனியத்துக்கு சேவை செய்கிறது என்றே சொல்ல வேண்டும்.

– புரட்சிப் பெரியார் முழக்கம் 11.11.2021

## வன்னியர் இட ஒதுக்கீடு இரத்தானது ஏன் ?

பாட்டாளி மக்கள் கட்சியுடன், தேர்தல் கூட்டணி நோக்கத்துக்காக அக்கட்சி விதித்த நிபந்தனைகளை ஏற்று, கடந்த பிப்ரவரியில் எடப்பாடி பழனிச்சாமி ஆட்சி அவசரம் அவசரமாக வன்னியர் தனி இட ஒதுக்கீடு மசோதாவை சட்டசபையில் கொண்டு வந்தது. தேர்தல் ஆணையம் தேர்தல் தேதியை அறிவித்த பின், அரசு எந்த புதிய முடிவையும் வெளியிட முடியாது என்பதால், ஆணையத்தின் அறிவிப்பு வெளி வருவதற்கு 2 மணி நேரத்திற்கு முன்பு அன்றைய முதலமைச்சர் இந்த மசோதாவை தாக்கல் செய்தார். இப்போது மதுரை உயர்நீதிமன்றத்தின் கிளை 10.5% இட ஒதுக்கீட்டை இரத்து செய்து விட்டது. நீதிமன்றம் ஏன் இரத்து செய்தது என்பது குறித்து ஆங்கில ‘இந்து’ நாளேடு(3.11.2021) எழுதியுள்ள தலையங்கத்தின் சில முக்கியமான கருத்துக்கள்.

1) பிப்ரவரி 2021 இல் சட்டசபையில் 10.5% இட ஒதுக்கீடு வந்த போது அரசியல் சட்டத்தின் 102 ஆவது திருத்தம் அமலில் இருந்தது. இதன்படி பிற்படுத்தப்பட் டோர் இட ஒதுக்கீட்டை நிர்ணயிக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு மட்டுமே இருந்தது. இந்த மசோதா சட்டசபையில் நிறைவேற்றப்பட்டப் பிறகு தான் மீண்டும் அரசியல் சட்டம் திருத்தப்பட்டு 105 ஆவது திருத்தமாக இந்த உரிமை மாநில அரசுகளுக்கு வழங்கப்பட்டது. எனவே இந்த சட்டம் கொண்டு வரப்பட்டபோது மாநில அரசுக்கு இதற்கான உரிமை இல்லை.

2) ஒரு குறிப்பிட்ட ஜாதிப் பிரிவினருக்கு தனியாக ஒதுக்கீடு வழங்கும் போது அந்தக் குழு, ஏனைய குழுக்களோடு ஒப்பீட்டளவில் பின்தங்கிய நிலையில் இருக்கிறதா என்பது குறித்து உரிய ஆய்வுகளும் தரவுகளும் திரட்டப்பட்டு அதன் அடிப்படையில் முடிவு எடுக்கப்பட வேண்டும். இந்தத் தனி ஒதுக்கீடில் அப்படித் தரவுகள் ஏதும் இல்லை.

3) 20% மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டில் 10.5% வன்னியருக்குப் போக மீதமுள்ள 9.5% யை சீர்மரபினர் 7%, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 2.5%க்குள் பகிர்ந்து கொள்ளக்கூடிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டுவிட்டனர். இதனால் இந்தப் பிரிவினர்களுக்கு பாகுபாடு காட்டப்பட்டுள்ளது.

4) இஸ்லாமியர், அருந்ததியினருக்கு உள் ஒதுக்கீடு செய்யப்பட்டபோது பின்பற்றப்பட்ட நடைமுறைகள் இப்போது புறக்கணிக்கப்பட்டுள்ளன. அந்த ஒதுக்கீடுகளுக்கு, புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டு, ஆணையங்கள் அமைத்து அந்த ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன. எனவே அந்த தனி ஒதுக்கீட்டோடு, வன்னியர் ஒதுக்கீட்டை ஒப்பிட்டு பேச முடியாது.

5) தமிழ்நாட்டில் அமலில் உள்ள 69% இட ஒதுக்கீட்டுக்காக மாநில அரசு 1994ஆம் ஆண்டு இட ஒதுக்கீடு பாதுகாப்பு சட்டம் ஒன்றை கொண்டு வந்தது. அந்த சட்டம் குடியரசுத் தலைவரின் ஒப்புதலும் பெறப்பட்டு 9ஆவது அட்டைவணையிலும் சேர்க்கப்பட்டது. அதாவது நீதிமன்ற பரிசீலனைக்கே உட்படுத்த முடியாது என்பதே 9ஆவது அட்டவணை. இந்த 1994ஆம் ஆண்டு சட்டத்தை திருத்தாமல் உள் ஒதுக்கீடு எதையும் சட்டப்படி செய்ய முடியாது.

6) உயர்நீதிமன்றம் எழுப்பியுள்ள இந்த சட்டப் பிரச்சனையால், இஸ்லாமியர், அருந்ததியர்களுக்கான உள் இட ஒதுக்கீடுகளுக்கும் இப்போது நெருக்கடிகள் உருவாகியுள்ளன.

7) பாட்டாளி மக்கள் கட்சி நடத்திய போராட்டங்களினால் 69% இட ஒதுக்கீடு குறித்து ஆராய நியமிக்கப்பட்ட ஆணையத்தின் பரிந்துரைகள் கிடைப்பதற்கு முன்பே அ.இ.அ.தி.மு.க ஆட்சி அவசர அவசரமாக இந்த மசோதாவை கொண்டு வந்தது. அரசியல் செல்வாக்கிற்காக குறுக்கு வழியில் அரசு செயல்பட்டதன் காரணமாக இப்போது இந்த தனி ஒதுக்கீடு இரத்து செய்யப்பட்டு இருக்கிறது.

- என்று, ‘இந்து’ ஆங்கில நாளேட்டின் தலையங்கம் கூறுகிறது.


உயர்நீதி மன்றத்தின் இந்த உத்தரவு காரணமாக வன்னியர்இட ஒதுக்கீடு மட்டுமல்ல அருந்ததியர், இஸ்லாமியர் உள்ளிட்ட இட ஒதுக்கீடுகளுக்கும் சட்டரீதியான நெருக்கடிகள் உருவாக்கப்பட்டு உள்ளன.

## மூட நம்பிக்கைகளுக்கு தடை விதிக்க கேரளாவில் புதிய சட்டம்

கேரள மாநிலத்தில் மூடநம்பிக்கைகளையும் தேவையற்ற ஆசார முறைகளையும் தடை செய்வதற்காக சட்ட உருவாக்கம் இறுதி நிலையில் உள்ளது. சட்ட மறு சீரமைப்பு ஆணையம் சமர்ப்பித்த நகல் சட்ட வடிவம் உள் துறையின் கீழ் பரிசீலனையில் உள்ளது. மிக விரைவாக சட்டப் பேரவையில் அதை சமர்ப்பித்து சட்டமாக்கும் நடவடிக்கையில் உள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது. மூடநம்பிக்கையும் தேவையற்ற ஆசாரங்களையும் பிரச்சாரம் செய்வதும் அதை நடைமுறைப்படுத்து பவர்களுக்கு 7 ஆண்டுகள் வரை சிறை தண்டனையும் ஒரு லட்சம் ரூபாய் அபராதமும் விதிக்கப்படும் என்று உள்ளது.

மந்திரவாதம், நாசகர மந்திர வாதம், பேய் விரட்டுதல், நிதி தேடி நடத்தும் தொல்லை, சிகிச்சையைத் தடை செய்வது போன்ற செயல்கள் குற்றத்திற்கு உட்பட்டதாகும். மந்திரவாதத்தின் பெயரில் தொல்லைகள் மிரட்டல்களும் கடும் குற்றமாகக் கருதப்படும். ஒவ்வொரு குற்றத்திற்கும் உரிய தண்டனையை நகலில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. மூடநம்பிக்கையும் தேவையற்ற ஆசாரங்களையும் தடை செய்ய சட்டம் கொண்டு வரப்படும் என்று அரசு முன்னரே தெரிவித்திருந்தது. சட்ட நகலை தயார் செய்ய ஜஸ்டிஸ் கே. டி. தோமஸ் தலைமையிலான சட்ட மறுசீரமைப்பு ஆணையத்தை கேட்டுக் கொண்டிருந்தது இச்செயல்கள் எல்லாம் கிரிமினல் சட்ட நடவடிக்கைகளாக கணக்கிடப்பட்டுள்ளது. எனவே உள்துறை அமைச்சகத்தின் தீவிர ஆய்வு தேவைப்படுகிறது. எனவே சட்டப் பேரவையில் சட்டம் ஆக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

### பந்தயம் கட்டி கேட்கிறேன்...!



பந்தயம் கட்டிக் கேட்கிறேன். உலகில் நான் அறிந்த வரையில் நம்நாட்டு மக்களிடம் (இந்துக்கள் என்பவரிடம்) ஒழுக்கம், நாணயம் என்பது சற்றேறக்குறைய 100 க்கு 99 பேர்களிடம் இருப்பதில்லை. காரணம் என்ன ?

நமக்கு ‘கடவுள்’ இல்லையா ? நாம் ‘கடவுள் பக்தி’ இல்லாதவர்களா !

நாம் ‘மதம்’ அற்றவர்களா ? நமக்கு ‘கடவுள் பயம்’ இல்லையா ? ‘கடவுள் நெறி’ இல்லையா ?

நன்மை செய்தால் ‘நற்பயன்’ கிடைக்கும், தீமை செய்தால் ‘தீய பயன்’ கிடைக்கும் என்கின்ற தான எச்சரிக்கைச் சாதனங்கள் இல்லையா ?

நம்மில் பெரியவர்கள் ‘தெய்வீகத் தன்மை’ கொண்ட மக்கள் என்பவர்கள் ஏற்பட்டு நமக்கு அறிவுரை கூறியவர்கள் – கூறுபவர்கள், கூறும்படியான நீதிநூல்கள் இல்லையா ?

அரசாங்க கட்டுத் திட்டம், தண்டனை முதலியவைகள் இல்லையா ?

நமக்கு குருமார்கள் – மடாதிபதிகள் இல்லையா ? இவைகளும் மற்றும் இவை போன்ற பலவும் ஏராளமாக இருக்கும் போது நமக்கு நம் மக்களுக்கு ஏன் ஒழுக்கம், நாணயம், இன உணர்ச்சி, பொதுநல உணர்ச்சி, யோக்கியத்தன்மை முதலிய நற்குணங்கள் இல்லை ?

இப்படிப்பட்ட நிலை ஏற்பட என்ன காரணம் என்பதை மனிதன் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**விடுதலை 31.07.1972**

## பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து பா.ஜ.க. ஆட்சி வரை (15)

# ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி பறித்த சமூக நீதி உரிமைகள்

*பிரிட்டிஷ் ஆட்சி – காங்கிரஸ் ஆட்சி காலங்களில் தமிழர் உரிமைகள் பறிக்கப்பட்ட வரலாறுகளைத் தொடர்ந்து இத்தொடரில் – அதைவிட மோசமாக பா.ஜ.க. ஆட்சியின் 'இருண்டகால' வரலாற்றை சுருக்கமாகப் பார்ப்போம்.*

**விடுதலை இராசேந்திரன்**

### 27 சதவீத இடஒதுக்கீடு மறுப்பு

பிற்படுத்தப்பட்டோருக்கு மத்திய அரசு பதவிகளில் 27 சதவீத இடஒதுக்கீடு வழங்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆணையைப் பிறப்பித்தார், சமூக நீதிக் காவலரான பிரதமர் வி.பி.சிங். 24 ஆண்டுகள் கழிந்த பிறகும் 27 சதவீதத்தில் இன்னும் பாதியளவுகூட பிற்படுத்தப்பட்டோருக்குப் பணிகள் வழங்கப்படவில்லை என்ற அதிர்ச்சியான தகவல்கள் வெளிவந்துள்ளன.

தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பெறப்பட்டுள்ள தகவல்கள் அதிர்ச்சியூட்டுகின்றன. 1993 செப்டம்பர் 8ஆம் தேதி பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு நடைமுறைக்கு வந்தது. இப்போது என்ன நிலை? மத்திய அரசின் வேலை வாய்ப்புத் துறை அமைச்சகம் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் வெளியிட்டுள்ள தகவலின்படி ஜனவரி 1, 2017 வரை இதுதான் நிலை.

24 மத்திய அமைச்சகங்களில் குரூப் 'ஏ' பிரிவு அதிகாரிகளில் பிற்படுத்தப்பட்டோர் 17 சதவீதம் பேரும் 'பி' பிரிவில் 14 சதவீதம் பேர் மட்டுமே பணியாற்றுகிறார்கள். 'சி' பிரிவு ஊழியர்களில் 11 சதவீதம் பேரும், 'டி' பிரிவில் 10 சதவீதம் பேரும் பணியாற்றுகிறார்கள். 24 அமைச்சகங்கள், மொத்தமுள்ள 37 அரசுத்துறைகளில் 24 துறைகள், சட்ட அங்கீகாரம் பெற்ற 8 அமைப்புகள் (பிரதமர் அலுவலகம், குடியரசுத் தலைவர் செயலகம், பொருளாதாரம் தொடர்பான அமைப்புகள்) உள்ளிட்ட 54 நிறுவனங்கள், துறைகள் பற்றியும் தகவல்கள் கிடைத்துள்ளன. இவற்றில் குரூப் 'ஏ' பிரிவில் 14 சதவீதம். 'பி', 'சி', 'டி' பிரிவுகளில் முறையே 15, 17, 18 சதவீதமும் மட்டுமே பிற்படுத்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள்.

மத்திய அமைச்சரவைக்கான செயலகத்தில் (Cabinet Secretariat) 64 'ஏ' பிரிவு அதிகாரிகளில், ஒருவர்கூட பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர் இல்லை. 60 பேர் திறந்த போட்டியில் வந்தவர்கள் (இவர்கள் பார்ப்பனர், உயர் ஜாதியினர்) பட்டியல் இனப் பிரிவைச் சார்ந்தவர்கள் 4 பேர் மட்டுமே. தகவல் மற்றும் ஒலி/ஒளி பரப்பு அமைச்சகத்தில் மொத்தமுள்ள 503 'ஏ' பிரிவு அதிகாரிகளில் 25 பேர் மட்டுமே பிற்படுத்தப்பட்டவர்கள்.

2015ஆம் ஆண்டில் இதே சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவலின்படி, 12 அமைச்சகங்கள் 10அரசுத் துறைகள், மற்றும் சட்ட அங்கீகாரமுள்ள நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்குக் கிடைத்த இடங்களின் எண்ணிக்கை 'ஏ' பிரிவில் 10.71 சதவீதம், 'பி' பிரிவில் 7-18 சதவீதம்.

2013ஆம் ஆண்டு பெறப்பட்ட தகவலின்படி 55 மத்திய அரசின் கீழ் உள்ள அமைப்புகளில் பிற்படுத்தப்பட்டோர் எண்ணிக்கை 9.43 சதவீதம் மட்டுமே.

சென்னையைச் சார்ந்த சமூக செயல்பாட்டாளர் முனைவர் ஈ. முரளிதரன், இந்த தகவல்களைப் பெற்றுள்ளார்.

மத்திய வேலை வாய்ப்புத் துறை அமைச்சகம் தந்துள்ள தகவல்கள் குறித்து அவர் தெரிவித்த கருத்துகள் மிகவும் முக்கியமானவை.

"தரப்பட்டிருக்கும் தகவல்கள்கூட முழுமையானவை அல்ல. இவற்றில் 11 அமைச்சகங்கள் தகவல் தெரிவிக்க மறுத்துவிட்டன. இந்தத் துறைகள்தான் வேலை வாய்ப்புகள் மிக அதிகமாக இருக்கும் துறைகள், தொடர்வண்டித் துறை, பாதுகாப்புத் துறை, உள்துறை, நிதித்துறை போன்றவை தகவல் தெரிவிக்க மறுத்துவிட்டன. மத்திய அரசின் மொத்த வேலை வாய்ப்புகளில் 91.25 சதவீத வேலை வாய்ப்புகள் இந்தத் துறைகளில்தான் இருக்கின்றன. இப்போது தகவல் தெரிவித்துள்ள 24 அமைச்சகங்களில் மொத்த வேலைகளில் 8.75 சதவீதம் வேலைகள் மட்டுமே உள்ளன. 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தொடர்வண்டித் துறையில் மத்திய அரசுப் பணியாளர்களாக பதிவு செய்தவர்கள் 13,28,199. இவர்கள் நிரந்தரப் பணியாளர்கள். இவர்களில் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் இனப் பிரிவினர் குறித்த எந்தத் தகவலும் இல்லை.

**மத்திய அரசுப் பணிகளில் 31 இலட்சம் பேர் பணியாற்றுகிறார்கள். ஆனால், தகவல் அறியும் சட்டத்தின் கீழ் நாம் பெற்றிருக்கும் தகவல் 2 இலட்சத்து 31 ஆயிரத்து 735 ஊழியர்களைப் பற்றி மட்டுமே.**

2015ஆம் ஆண்டில், நான் தகவல் கேட்டபோது, 40 அமைச்சகங்கள், 48 மத்திய அரசுத் துறைகள், பிற்படுத்தப்பட்டோர் எண்ணிக்கைக் குறித்து, தகவல் தர மறுத்து விட்டன.

மத்திய வேலை வாய்ப்பு, பொது மக்கள் குறை தீர்ப்பு மற்றும் ஓய்வூதியத் துறை, 2013ஆம் ஆண்டு டிசம்பர் 19ஆம் தேதி, ஒரு தாக்கீதை பிறப்பித்தது. (O.M. No.43011.10.2002 Estt. Res) இதன்படி ஒவ்வொரு துறையிலும் பணியாற்றும் பட்டியல் இனம், பழங்குடி மற்றும் இதர பிற்படுத்தப்பட்டோர் எண்ணிக்கை பிரதிநிதித்துவம் குறித்தத் தகவலைத் தெரிவிப்பது கட்டாயக் கடமை' என்று இந்த தாக்கீது அறிவுறுத்தியது. ஆனால் அது கிடப்பில் போடப்பட்டது.

2013 ஜூன் மாதம் மத்திய வேலை வாய்ப்பு அமைச்சகம் விரிவான ஒரு தாக்கீதைப் பிறப்பித்தது. (No.36038/1(i) 2013 Estt. Res) அதில் பட்டியல் இனப் பிரிவினர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோருக்கான நிரப்பப்படாத பணியிடங்களை, விரைவாகக் கண்காணித்து, உயர்மட்ட அளவில் முடிவுகளை உடனடியாக எடுக்க வேண்டும் என்று கூறியது. 6 மாதத்துக்குள் பணியிடங்களை நிரப்புவதற்கான விரைவான செயல்பாடுகளை முடுக்கிவிட வேண்டும். அதற்காகத் தேவைப்பட்டால், விதிகளிலிருந்து விலக்குகளை வழங்கலாம் என்றும் தாக்கீது அறிவுறுத்தியது.

இதைத் தொடர்ந்து மத்திய வேலை வாய்ப்புத் துறை இணை அமைச்சர் ஜிதேந்திரசிங் நாடாளுமன்றத்தில் ஒரு அறிவிப்பை வெளியிட்டார். சமூக நீதித் துறைஅமைச்சகத்தின் பரிந்துரைப்படி இடஒதுக்கீட்டுப் பிரிவினருக்கான நிரப்பப்படாத இடங்களை நிரப்புவதற்கான முனைப்பான செயல்பாடுகள் 2014 நவம்பர் 11இல் தொடங்கி,

- *102ஆவது சட்டத் திருத்தத்தின் வழியாக 'பிற்படுத்தப்பட்டோரை' நிர்ணயிக்கும் உரிமையை மாநில அரசிடமிருந்து பறித்த ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி, பிறகு பா.ஜ.க. பிற்படுத்தப்பட்ட எம்.பி.கள் எதிர்ப்பு காரணமாக மீண்டும் 105ஆவது சட்டத்திருத்தம் கொண்டு வந்து மாநிலங்களிடம் ஒப்படைத்தது.*
- *மருத்துவப் படிப்புகளுக்கு அகில இந்திய கோட்டாவில் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு வழங்க மறுத்த ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி, தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சி நடத்திய சட்டப் போராட்டத்தின் விளைவாக உச்சநீதிமன்றக் கண்டனத்துக்கு உள்ளானதால் மீண்டும் இடஒதுக்கீடு செய்ய முடிவெடுத்தது.*

ஆகஸ்டு 2016க்குள் முடிக்கப்படும் என்றார்.

இதற்கான செயல் திட்டங்களும் உருவாக்கப்பட்டன. அந்த செயல் திட்டங்கள் செயலாக்கம் பெற்றிருக்குமேயானால் இவ்வளவு மோசமான நிலை ஏற்பட்டிருக்காது. தாக்கீதுகளோ, செயல் திட்டங்களோ முழுமையாக அலட்சியப்படுத்தப்பட்டதைத்தான் இந்த புள்ளி விவரங்கள் காட்டுகின்றன என்றார் முனைவர் முரளிதரன்.

இறுதியாக 2019ஆம் ஆண்டு நிலவரம் இது தான்.

சுதந்திரம் அடைந்து 70 ஆண்டுகள்.

27 சதவீதம் நடைமுறைப்படுத்தப்பட்டு 27 ஆண்டுகளான பிறகும்,

மத்திய அரசின் அதிகாரப் பகிர்வில் நாட்டின் பெரும்பான்மை மக்களான ஓபிசி (சூத்திர) பிரிவினர்க்கு இன்னமும் அவல நிலை.

குரூப் 'ஏ' பதவிகள் - 27 துறைகளில் ஓபிசி பிரிவினர் 'ஜீரோ' (ஒருவர்கூட இல்லை).

மத்திய அரசின் 41 அமைச்சக / துறைகளில் ஓ.பி.சி, எஸ்.சி., எஸ்.டி. பிரிவினர் எண்ணிக்கை (31.3.2019).

| குரூப் | மொத்த பணியாளர்கள் | எஸ்.சி. | எஸ்.டி. | ஓபிசி | ஓபிசி % |
|---|---|---|---|---|---|
| குரூப் 'ஏ' | 2,69,135 | 41,131 | 16,571 | 45,186 | 16.78 |
| குரூப் 'பி' | 1,06,123 | 14,903 | 8,296 | 18,875 | 17.78 |
| குரூப் 'சி' | 4,74,260 | 90,481 | 51,046 | 94,121 | 19.84 |
| குரூப் 'டி' | 1,81,531 | 34,265 | 25,715 | 39,246 | 21.61 |
| மொத்தம் | 10,31,049 | 1,80,780 | 1,01,628 | 1,97,428 | |
| சதவிகிதம் | | 17.53% | 9.85% | 19.14% | |

ஆதாரம் : மத்திய பொது நிறுவனங்களின் துறை சர்வே அறிக்கை 2018-2019.

(தகவல் அனுப்பி உதவியவர்: தமிழ்நாடு அரசின் சமூக நீதி கண்காணிப்புக் குழு உறுப்பினர் கோ. கருணாநிதி)

### தமிழர் வேலை வாய்ப்புகளைப் பறிக்கும் வடநாட்டுக்காரர்கள்

"முஜே தமில் நஹி மாலும், இந்தி மே போலோ" (எனக்கு தமிழ் தெரியாது, இந்தியில் சொல்). இன்று தமிழகத்தில் உள்ள மத்திய அரசு அலுவலகங்கள், இரயில்வே பயணச் சீட்டு பெறும் இடங்கள், வாழ்நாள் காப்பீடு, பொதுக் காப்பீடு மற்றும் பொதுத் துறை வங்கிகளில் பணியாற்றும் ஊழியர்களிடம் தமிழர்கள் இவ்வார்த்தைகளை எதிர் கொள்கிறார்கள். டெல்லி அரசுகளின் கயமைத் தனத்தினால், சூழ்ச்சியினால் கடந்த பத்தாண்டுகளாக தமிழகத்தில் இயங்கும் மத்திய அரசுத்துறைகளில் தமிழர்களுக்கான வேலை வாய்ப்புரிமை தட்டிப் பறிக்கப்பட்டுள்ளது.

இது சேவைத்துறைகளில் மட்டு மல்லாது தமிழகத்தில் செயல்படும் மத்திய அரசின் தொழிற்துறைகளான (Factories & Enterprises) என்.எல்.சி (NLC), ஓ.என்.ஜி.சி (ONGC), பி.எச்.இ.எல் (BHEL), துப்பாக்கி தொழிற்சாலை, டாங்கி தொழிற்சாலை, இராணுவ உடை தயாரிப்பகம் (Defence Factories), இணைப்பு பெட்டி தொழிற்சாலை, கல்பாக்கம் அணுமின் நிலையம் ஆகிய தொழிற்சாலைகளில் இந்த நிலை தான்.

மத்திய அரசு அலுவலகங்கள், தொழிற்சாலைகள், பொதுத்துறை நிறுவனங்கள், காப்பீட்டு நிறுவனங்கள், வங்கிகளில் அதிகாரிகள் அளவிலான பணி நியமனங்களுக்கு அகில இந்திய அளவில் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இத்தேர்வுகளில் முதற்கட்ட அப்ஜெக்டிவ் (objective) வினாத் தாள்கள் இந்தியிலும் ஆங்கிலத்திலும் இருக்கிறது. இரண்டாம் கட்ட எழுத்துமுறை தேர்வுகளை (Descriptive) இந்தியிலோ அல்லது ஆங்கிலத்திலோ எழுதலாம் என்று விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. நேர்முகத் தேர்வுகளும் (Interview) டெல்லியில் மையமிட்டு நடத்தப்பட்டு, நேர்முகத் தேர்வுகளை நடத்தி மதிப்பெண் அளிப்பவர்கள் பெரும்பாலும் வட மாநிலங்களை சேர்ந்தவர்களாக இருப்பதால் இந்தி பேசுபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு தமிழகத்தை சேர்ந்தவர்கள் பின்னுக்கு தள்ளப்படுகிறார்கள். இலட்சங்களில் மாத ஊதியம் பெறும், இவ்வாறு தேர்வு செய்யப்படும் அதிகாரிகளே எதிர்காலத்தில் அந்த நிறுவனங்களுக்கு தலைமைப் பொறுப்புகளுக்கு வருகிறார்கள், இவ்வாறு தலைமைப் பொறுப்புகளுக்கு தமிழகத்தை சேர்ந்தவர்களை வரவிடாமல் தடுப்பதற்கான டெல்லியின் சூழ்ச்சியினால் இப் பணியிடங்களுக்கு தமிழர்கள் ஒருவர் கூட நியமிக்கப்படுவதில்லை

இதே நிலைதான் அதிகாரிகள் அல்லாத பணியாளர் அளவிலான தேர்வுகளுக்கும்.

பணியாளர் அளவிலான தேர்வுகள் மாநில அளவிலோ அல்லது மண்டல அளவிலோ நடத்தப்படவேண்டும் என்று பல ஆணைகள், தீர்ப்புகள் உள்ளன. ஆனால் இவை எல்லாம் காற்றில் விடப்பட்டு, படிப்படியாக தளர்த்தப்பட்டு மத்திய அரசின் ஆதிக்கப் போக்கினால் இப்பணிகளும் அகில இந்திய அளவில் நடத்தப்படுகின்றன.

உதாரணத்திற்கு 2006 ஆண்டுவரை மத்திய பணியாளர் தேர்வாணையம் மண்டல அளவிலேயே தேர்வுகளை நடத்தி வந்தது, தபால் துறை தபால் உதவியாளர் பணியிடங்களுக்கு 2014 வரை மாநில அளவில் நடத்தி வந்தது. அப்போது இத்தேர்வுகளில் அப்ஜெக்டிவ் (objective) மற்றும் நேர்முகத் தேர்வு (Interview) மூலமாக இரண்டு கட்ட நிலைகளில் பணி நியமனச் சேர்க்கை நடைபெற்று வந்தன. இதனால் அந்தந்த மாநில மக்களுக்கான வேலை வாய்ப்புகள் மத்திய அரசு நிறுவனங்களில் கிடைத்து வந்தது.

பின்னர் இவை அகில இந்திய அளவிலான தேர்வுகளாக மாற்றப்பட்டு இத்தேர்வுகளில் இந்தி பேசுபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் விதமாக சூழ்ச்சிகள் செய்யப்பட்டு எழுத்துமுறை (Descriptive) வினாத் தாள்கள் இந்தியில் நுழைக்கப்பட்டது. அது மட்டுமல்லாமல் அப்ஜெக்டிவ் (objective) வினாத்தாள்களும் ஆங்கிலத்துடன் இந்தியிலும் இருப்பதால், இந்தியைத் தாய்மொழியாக கொண்டவர்களுக்கு, வினாக்களை எளிதில் புரிந்து கொண்டு விடையளிப்பது மிகவும் எளிதாக இருக்கிறது. மற்ற மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் ஆங்கிலத்தில் மட்டுமே விடையளிக்க வாய்ப்புகளை இந்திய அரசு ஏற்படுத்தித் தந்து இந்தி பேசும் மக்களுக்கு சாதகமாக நடந்துகொள்கிறது என்பதை இங்கு சுட்டிக் காட்டுகிறோம். மிக உயரிய முதல்நிலை IAS, IPS பணியிடங்களுக்கு தேர்வுகளை நடத்தும் UPSC கூட

(4ஆம் பக்கம்)

– புரட்சிப் பெரியார் முழக்கம் 11.11.2021

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

### குடியாத்தம் – இராமாலையில் சிறப்புடன் நடந்தது

# ‘நான் இந்துவாக இருக்கப் போவதில்லை’: பெரியாரின் நூல் திறனாய்வு கூட்டம்

வேலூர் மாவட்டம் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக 7.11.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி அளவில் தலித்முரசு மற்றும் காட்டாறு பதிப்பகம் வெளியிட்ட பெரியாரின் கட்டுரைத் தொகுப்புகள் “நான் இந்துவாக இருக்கப் போவதில்லை” இன்னும் நூல் குறித்த அறிமுக நிகழ்வும் சமூகநீதி தளத்தில் தொடர்ந்து களப்பணி ஆற்றி வருகின்ற தோழர்களுக்கு அவர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் ஊக்கப்படுத்தி பாராட்டி நினைவுப் பரிசு வழங்கும் நிகழ்வும் நடை பெற்றது.

இந்நிகழ்வில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தலித்முரசு ஆசிரியர் மற்றும் தமிழ்நாடு தாழ்த்தப் பட்டோர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையத்தின் துணைத் தலைவர் புனித பாண்டியன், எழுத்தாளர் அழகிய பெரியவன், திராவிடர் கழக வேலூர் மண்டல தலைவர் சடகோபன், இந்திய குடியரசு கட்சி வேலூர் மாவட்டத் தலைவர் தலித் குமார் ஆகியோர் பங்கேற்று நூல் குறித்து மிக விரிவாகப் பேசினர். இந்நிகழ்விற்கு ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத் தலைவர் திலீபன் தலைமை தாங்கினார் கழகத்தினுடைய வேலூர் மாவட்ட பொறுப்பாளர்கள் சதீஷ்குமார், ரூபன், கோதண்டராமன், சுரேஷ், பார்த்திபன், வினோத், புருஷோத்தமன் ஆகிய தோழர்கள் முன்னிலை வகித்தனர். அரவிந்த் ஜெய்சூர்யா வரவேற்புரையாற்றினார்.

நிகழ்வில் நூற்றுக்கணக்கான சாதி மறுப்பு மற்றும் சுயமரியாதை திருமணத்தை நடத்திக் கொண் டிருக்கும் திராவிடர் விடுதலைக் கழகத் தலைமைக் குழு உறுப்பினர் ஈஸ்வரனின் சாதி ஒழிப்பு களப் பணியைப் பாராட்டி அங்கீகரிக்கும் வகையில் நினைவு பரிசு வழங்கப் பட்டது.

கடந்த செப்டம்பர் 17ஆம் தேதி அறிவாசான் பெரியார் பிறந்த நாளையொட்டி வேலூர் மாவட்டம் குடியாத்தம் நகரில் 1500 சதுர அடியில் மிகப் பிரம்மாண்டமான பெரியார் ஓவியத்தை தொடர்ந்து எட்டு மணி நேரம் வரைந்து சாதனை படைத்த ஆசிரியர் தெருவிளக்கு கோபிநாத் பணியைப் பாராட்டி பயன் ஆடை அணிவித்து நினைவு பரிசு வழங்கப் பட்டது.

கழகத் தோழர் திராவிட பாண்டியன், தமிழ்நாடு பாண்டிச்சேரி பார் கவுன்சிலில் வழக்கறிஞராக பதிவு செய்தார் எனவே, தோழரே களப்பணி நீதிமன்றத்திலும் மேலும் தொடர வேண்டும் என்று பாராட்டிப் பயணித்து அவருக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது.

முன்னதாக வேலூர் மாவட்ட கழகச் செயலாளர் வழக்கறிஞர் சிவா நிலத்தில் நிகழ்வு நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டது தொடர் மழையின் காரணமாக உடனடியாக குடியாத்தம் பகுதியில் திராவிடர் கழகத் தோழர் அன்பரசன் இல்லத்தில் அமைந்துள்ள பெரியார் அரங்கத்திற்கு மாற்றப் பட்டது. மழையின் காரணமாக தோழர்கள் வருகை புரிய பெரும் சிரமம் இருப்பினும் தோழர்கள் அதை பொருட்படுத்தாமல் சுமார் 100 பேர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கழகத் தோழர் ஜெயக்குமார் - ரோகிணி ஆகியோரின் ஆண் குழந்தைக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கபிலன் என்ற பெயர் சூட்டி மகிழ்ந்தார்.

நிகழ்வின் இறுதியில் மாட் டிறைச்சி உணவு வழங்கப்பட்டது.

நிகழ்வின் சிறப்பு அம்சமாக நிகழ்வினை தொடக்கம் முதல் இறுதி வரை கழகத்தின் பெண் தோழர்களே நிகழ்வுகளை ஒருங்கிணைத்தனர்.

நிகழ்வின் இறுதியாக ஜெயக்குமார் நன்றி கூறினார்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேர்வுகளைத் தமிழில் நடத்துகிறது. ஆனால் மக்களிடையே நேரடியாக தொடர்பு கொண்டு களத்தில் பணியாற்றும் இப்பணியிடங்களுக்கு நாம் பலமுறை வலியுறுத்தியும் இந்திய அரசானது தமிழில் தேர்வுகளை நடத்த மறுக்கிறது என்பது வன்மையாக கண்டிக்கத்தக்கதாகும்.

இவ்வாறு இந்தி பேசும் வேற்று மாநிலத்தை சேர்ந்தவர்கள் தமிழகத் தில் சிறு நகரங்களுக்கும், மாவட்ட தலைநகரங்களுக்கும் பணியமர்த்தப் பட்டு பெருவாரியாக பணியாற்றி வருகிறார்கள். இதனால் தமிழகத்தில் இயங்கும் மத்திய அரசின் சேவைகளைப் பெறவேண்டுமானால் அங்கு பணியாற்றும் இந்தி மட்டுமே தெரிந்த வேற்று மாநிலப் பணியாளர்களிடம், இந்தி தெரிந்தால் மட்டுமே சென்று அவர்களின் சேவையை பெற முடியும் என்ற நிலை தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

மத்திய அரசு பணியிடங்களில் தேவைக்கேற்ப மண்டல அளவிலோ அல்லது மாநில அளவிலோ பணியிடங்களை நிரப்பிக் கொள்ளலாம் என்று உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு இருந்தும் (Radhe Shyaam Vs Union of India) மத்திய அரசானது தான் தோன்றித்தனமாக வடவர்களை பணிகளில் திணிப்பதையே கருத்தாக கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் மத்திய அரசுப் பணிகளை தமிழர்களுக்கு மறுக்கும் இந்த ஆபத்தான போக்குகளை தடுத்து நிறுத்த வேண்டியது அவசரம்; அவசியம்.

**தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில்**

1.10.2015 நிலவரப்படி 18 தேசிய வங்கிகளில் மொத்தமுள்ள 450 மேலாளர் பதவிகளில் பிற்படுத்தப்பட்டோர் 5 பேர் மட்டுமே. 1255 துணை மேலாளர் பதவிகளில் பிற்படுத்தப்பட்டோர் 16 பேர் மட்டுமே. அதாவது 1.1 சதவீதம். அரசின் கீழ் உள்ள நான்கு ஆயுள் காப்பீட்டுக் கழகங்களில் (இன்சூரன்ஸ் நிறுவனங்கள்) 43 மேலாளர் பதவிகளில் ஒரே ஒருவர்தான் பிற்படுத்தப்பட்டவர். 275 துணை மேலாளர் பதவிகளில் 3 பேர் மட்டுமே பிற்படுத்தப்பட்டவர். ‘தலித்’ நிலையை சொல்லவே வேண்டாம்.

(தொடரும்)

# ‘ஜெய்பீம்’ உருவாக்கிய தாக்கம்

ஜெய்பீம் இப்போது பேசப் படுகிற ஒரு திரைப்படமாக மாறி யிருக்கிறது. ஜோதிகா சூர்யா தயாரிப்பில் வெளிவந்து இருக்கிற ஒரு படம். ஏற்கனவே ஜாதிய வன்கொடுமைகளை ஜாதிய ஒடுக்கு முறைகளை பேசுகிற பல திரைப் படங்கள் தமிழகத்தில் தொடர்ச்சியாக வந்து கொண்டிருக்கிறது. பரியேறும் பெருமாள், அசுரன், கர்ணன் இவைகள் ஜாதிய ஒடுக்குமுறைகளை பேசின என்று சொன்னால், இருளர் என்ற பழங்குடி மக்கள் மீதான ஜாதிய ஒடுக்குமுறையை பேசுகிற படமாக ஜெய் பீம் வந்திருக்கிறது.

1995ஆம் ஆண்டு இருளர் சமூகத்தைச் சேர்ந்த ராஜாக்கண்ணு மீது காவல்துறை பொய்யான திருட்டு குற்றம் ஒன்றை சுமத்தி, காவல் நிலையத்தில் அவரைச் சித்திரவதை செய்து அடித்துக் கொன்றதை சித்தரிக் கின்ற ஒரு படம். உண்மையான நடந்த நிகழ்வு இப்போது ஒரு திரைப்படமாக மாற்றப்பட்டிருக்கிறது. இருளர் சமூகத்திற்கான ஒரே அடையாளம் ஜாதி என்ற ஒன்று மட்டும் தான். அவர்களுக்கு அரசு அங்கீகாரம் தரக்கூடிய எந்த அடையாளங்களும் கிடையாது. ரேஷன் அட்டைகள் கிடையாது, பட்டாக்கள் கிடையாது, ஆனால் சமூகம் அவர்கள் மீது சுமத்திய ஜாதி என்ற ஒரு அடை யாளத்தை மட்டும் உண்டு. அதை அவர்கள் சுமந்து கொண்டு எப்படி சமூகத்தால் ஒரு ’திருட்டு ஜாதி’ என்ற முத்திரையோடு புறக்கணிக்கப் பட்டார்கள்; காவல்துறையால் எந்தெந்த திருட்டுக் குற்றங்கள் கண்டுபிடிக்கப்படவில்லையோ, அந்தத் திருட்டுக் குற்றத்திற்கு பலி கடாக்களாக மாற்றப்பட்டு இருந் தார்கள் என்பதை படம் சித்தரித்துக் காட்டுகிறது.

இந்த படத்தில் இந்த எளிய மக்களுக்காக வாதாட அந்த வழக்கறிஞர் சந்துரு. அவர் இந்த வழக்கில் எப்படி அனைத்து அரசு எந்திரங்களையும் எதிர்த்துப் போராடினார் என்பதை படம் அற்புதமாக சித்தரிக்கிறது. நீதிமன்றத் திற்கும் காவல் துறைக்கும் உள்ள அதிகாரம் என்பது மக்களுக்கான அதிகாரமாக மாற்றப்பட்டால் சமூகத்தில் எவ்வளவு பெரிய மாற்றங்களை உருவாக்க முடியும் என்ற கருத்தையும் இந்த படத்தின் வழியாக நாம் உணர முடிகிறது. சிறையிலேயே நீண்டகாலமாக பிணை மறுக்கப் பட்ட 7,000 பேருக்கு ஒரே உத்தரவின் மூலம் பிணையில் விடுதலை வாங்கித் தந்த வழக்கு. அந்த உத்தரவுக்குக் காரணமாக இருந்தவர் அன்றைக்கு வழக்கறிஞர் சந்துரு அவர்கள். இந்த சம்பவத்திற்கு பிறகுதான் பேராசிரியர் கல்யாணி அவர்கள் இருளர் பழங் குடியின மக்களுக்காக அவர்களுடைய மேம்பாட்டிற்கான இயக்கங்களை தொடங்கி நடத்தினார் என்பதையும் படம் சித்தரிக்கிறது.

படம் முழுவதும் பெரியார் அம்பேத்கர் காரல் மார்க்ஸ் இவர்கள் முன்னிலைப் படுத்தப்படுகிறார்கள். சூர்யா இந்த இருளர் சமூகத்தின்மீது நடத்துகின்ற அடக்குமுறையை திரைப்படம் ஆக்கியதோடு அந்த சமூகத்தின் மேம்பாட்டிற்காக ஒரு கோடி ரூபாய் நிதியை தமிழக முதலமைச்சர் வழியாக வழங்கியிரு க்கிறார் என்பதும் உண்மையிலேயே பாராட்ட கூடிய ஒரு செய்தியாகும். . இத்தகைய படங்களை நாம் வரவேற்போம் போற்றுவோம்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்தப் படத்தைப் பார்த்து வரவேற்றதோடு மட்டு மல்லாமல், அடுத்த மூன்று நாட்களில் இருளர் சமூகத்தின் கிராமத்தை நோக்கிப் போய் அவர்களுக்கான நலத்திட்டங்களை வழங்கியுள்ளார். இது ’ஜெய் பீம்’ படத்தின் வெற்றி விழா என்றே கூறலாம். அதற்கு முதலமைச்சர் தேர்வு செய்த நாள்; ’தீபாவளி’ நாள். நரகாசூரன் என்ற திராவிட பழங்குடித் தலைவரை பார்ப்பன தேவர்கள் சூழ்ச்சியாக ஒழித்த நாள் தீபாவளி என்று புராணம் கூறுகிறது. அதே நாளை பழங்குடி மக்களின் வாழ்வுரிமை நாளாக மாற்றிக்காட்டியிருக்கிறார். தமிழ்நாடு முதலமைச்சர்.

# தமிழ்நாடு கொடியை கொளத்தூர் மணி ஏற்றினார்

நவ.1 தமிழ்நாடு நாளாக முன்னெடுக்கப்பட்டு தமிழ்நாட்டு கொடி ஏற்றும் நிகழ்வு தமிழகம் முழுவதும் நடைபெறும் என பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பின் சார்பில் அறிவிக்கப்பட்டிருந்தது.

நவம்பர் 1 காலை 8 மணியளவில், பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பாக வெளிடப்பட்ட தமிழ்நாடு கொடியை, கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கொளத்தூர் செக்போஸ்ட்டில் ஏற்றி வைத்தார். மேட்டூர் கழகத் தோழர்கள் உடனிருந்தனர்.

அதன் அடிப்படையில் சேலம் மாவட்டம் நங்கவள்ளியில் கழகத் தோழர்கள் 01.11.2021 திங்கள் காலை 10.30 அளவில் தமிழ்நாடு கொடி ஏற்ற முயன்ற பொழுது அதற்கு அனுமதி மறுத்து காவல்துறை தடுத்தது. காவல்துறையின் தடையையும் மீறி தமிழ் நாட்டுக் கொடியை ஏற்ற முயன்ற கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

கைது செய்யப்பட்ட தோழர்கள் கிருஷ்ணன், ராஜேந்திரன், கண்ணன், சந்திரசேகரன், பிரபாகரன், தீனதயாளன், அருண்குமார், கோகிலா ஆகிய 8 பேரும் நங்கவள்ளி MNV மஹால் திருமண மண்டபத்தில் அடைத்து வைக்கப்பட்டார்கள். மாலை 6.00 மணிக்கு தோழர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 11th November 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN